சாட்சி ஆஜர் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறது.

ம.சா. 01 திரு. ஆறுமுகம் த /பெ திரு. இராஜா , வயது . 57

## எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி .–

05. நான் எதிரிக்கு அனுப்பிய சட்ட அறிவிப்பிலும் இந்த வழக்கு புகாரிலும் , முதல் விசாரணையிலும், எதிரி நந்தனம் கல்லூரியில் தாளாளராக பணியாற்றுவதாகவும் அந்த கல்லூரியில் நர்சிங் கல்லூரி தொடங்க வேண்டி என்னிடம் கடன் பெற்றதாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். இந்த வழக்கு காசோலையில் எதிரியானவர் ஸ்ரீ நந்தனம் மேரி டைம் அக்கடமியின் சேர்மன் என்ற பொறுப்பில் கையொப்பம்மிட்டதாக குறிப்பிட்டுள்ளது என்றால் சரிதான். நான் கூறும் நந்தனம் பொறியியல் கல்லூரி மற்றும் நர்சிங் கல்லூரி வேறு என்றாலும் காசோலையில் குறிப்பிட்டுள்ள ஸ்ரீ நந்தனம் மேரி டைம் அகாடமி வேறு என்றாலும் எனக்கு தெரியாது எதிரி என்னிடம் பெற்ற கடனுக்கு இந்த காசோலை தான் கொடுத்தார். நான் அனுப்பியுள்ள சட்ட அறிவிப்பிற்கும் புகாருக்கும் நான் தற்போது அளிக்கும் சாட்சியத்திற்கும் முரண்பாடு உள்ளது என்றால் சரி அல்ல. எனக்கு ஆங்கிலத்தில் எழுத படிக்க தெரியுமா என்றால் கையொப்பம் மட்டும் இடுவேன் எழுத படிக்க தெரியாது. ஆங்கிலத்தில் லேக்ஸ் என்ற வார்த்தையை எழுத தெரியுமா என்றால் laks ஆகும். நான் தாக்கல் செய்துள்ள காசோலையில் thirty lacs என்று குறிப்பிட்டுள்ளது என்றால் அவர் எழுதிக்கொடுத்தது தான். பொதுவாக காசோலையில் எண்ணால் எழுதப்பட்டுள்ள பணத்திற்கும் எழுத்தால் எழுதப்பட்டுள்ள பணத்திற்கும் வேறுபாடு இருந்தால் எழுத்தால் எழுதப்பட்டுள்ள பணத்தின் மதிப்பை தான் எடுத்துக் கொள்வார்கள் என்றாலும் இந்த வழக்கு கசோலையில் அவ்வாறு முரண்பாடு உள்ளது என்றாலும் சரியல்ல. காசோலையானது வங்கி கணக்கு மூடப்பட்டுள்ளது என்ற காரணத்திற்காக தான் திருப்பபட்டுள்ளது என்றால் சரிதான்.

06. நந்தனம் மேரி டைம் அகாடமியில் யார் யார் இயக்குனர்களாக உள்ளார்கள் என்ற விவரம் தெரிந்து கொண்டு அவர்கள் மீது இந்த வழக்கு தொடுத்துள்ளேன் என்றால் இல்லை. நந்தனம் குழுமத்தில் இருந்து மொத்தமாக என் வங்கி கணக்கிற்கு 2015 ஆண்டு ரூபாய் 84 லட்சம் அனுப்பப்பட்டுள்ளது என்றால் எனக்கும் அவர்களுக்கும் பரிவர்த்தனை இருந்தது ஆனால் பணம் எனக்கு குறிப்பிட்டு ஞாபகம் இல்லை. நான் 2015 ஆம் ஆண்டு நந்தனம் குழுமத்தில் ரூபாய் 4.50

லட்சத்திற்கு உண்டான ஒரே ஒரு வேலை மட்டும்தான் செய்து உள்ளேன் என்றாலும் மீதமுள்ள பணம் அனைத்தும் எனக்கும் அவர்களுக்கும் இருந்த கொடுக்கல் வாங்கல் பணம் என்றால் சரியல்ல. நந்தனம் மேரி டைம் அகாடமி எண் சேர்மன் என்ற ஹோதாவில் எதிரி மீது இந்த வழக்கு தாக்கல் செய்யப்படாமல் தனிநபரான அவர் மீது இந்த வழக்கு தொடுக்கப்பட்டுள்ளதால் இந்த வழக்கு நிலைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. 2019 ஆம் ஆண்டு எதிரியின் அலுவலகத்தில் வேலை செய்த பல நபர்கள் நந்தனம் மாரி டைம் அகாடமியின் காசோலைகளை மோசடியாக கையாடல் செய்ததன் காரணமாக அந்த கணக்கு முடிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எதிரி அடிக்கடி வெளியூர் செல்லும் காரணத்தால் நிர்வாகத்திற்காக கையொப்பமிட்ட காசோலைகளை அவர் அலுவலகத்தில் வைத்திருப்பார் என்றாலும் அவ்வாறு கையொப்பம் செய்த ஒரு காசோலையை நான் மோசடியாக பயன்படுத்தி இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள காசோலை எண் 014027 என்றால் சரிதான்.

07. இந்த காசோலைக்கு முந்தைய காசோலை எண்ணான 014026 மற்றும் இந்த காசோலைக்கு பிந்தைய காசோலையான 014028 ஆகியவை 2015 ஆம் ஆண்டு வங்கிக் கணக்கில் வேறு நபர்களுக்கு செலுத்தப்பட்டு உள்ளது என்றால் சரியல்ல. எனவே 2015 ஆம் ஆண்டு பரிவர்த்தனைகள் இருந்தபோது எனக்கு கொடுக்கப்பட்ட காசோலையை நான் மோசடியாக தற்போது பூர்த்தி செய்து இந்த வழக்கு தொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. 2019 ஆண்டு மூடப்பட்ட வங்கிக் கணக்கின் காசோலையை எதிரி எனக்கு 2021 ஆம் ஆண்டு கொடுத்துள்ளதாக நான் கூறுவது தவறு என்றால் சரியல்ல. காசோலையில் கண்ட தொகையை எதிரிக்கு கொடுக்காமலேயே 6 ஆண்டுகள் கழித்து 2021 ஆம் ஆண்டு எதிரி கொடுத்ததாக கூறி இந்த வழக்கு காசோலையை நான் மோசடியாக வங்கி கணக்கில் செலுத்தி பொய்யாக இந்த வழக்கு தொடுத்துள்ளதால் பிரிவு 43 இன் கீழ் எந்த பொறுப்பும் இல்லை என்றால் சரியல்ல. நான் எதிரிக்கு பணம் கொடுக்கவில்லை என்றாலும் அதற்கு மாறாக எதை என்னிடம் காசோலை எதுவும் கொடுக்கவில்லை என்றாலும் பொய்யாக இவ்வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல.

KODHAVADI SUBRAMANIAN DINESH

Digitally signed by KODHAVADI SUBRAMANIAN DINESH

Witness sign

Judicial Magistrate No.01
Thirupattur